## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.107/2024

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கண்ணம்மாள் | வட்டம் | : | சத்தியமங்கலம் |
| த/பெ. | : | | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | ராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | புஞ்சை புளியம்பட்டி | வயது | : | 65 |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். வாதியின் ஆதார் அட்டை ஒப்பீடு செய்யப்பட்டது **வா.சா.ஆ.1** ஆகவும், 19.06.2024 ம் தேதியிட்ட வாதி 1, 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதிவு அறிவிக்கை அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 28.06.2024 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியின் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 24.06.2024 ம் தேதியிட்ட 3 ம் பிரதிவாதியின் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 28.06.2024 ம் தேதியிட்ட 4 ம் பிரதிவாதியின் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 28.06.2024 ம் தேதியிட்ட 5 ம் பிரதிவாதியின் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.6** ஆகவும், 28.10.1992 ம் தேதியிட்ட வாதிக்கு வழங்கிய XIX அனுபந்தம் வீட்டுமனை ஒப்படை நமூனா அசல் **வா.சா.ஆ.7** ஆகவும், 23.10.2025 ம் தேதியிட்ட வாதி பெயரில் பட்டா உள்ளது என்பதற்கு உரிய தகவல், தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்டது அசல் **வா.சா.ஆ.8** ஆகவும், 30.10.2025 ம் தேதியிட்ட வாதி கணவர் ராமன் பெயரிலும், வாதி பெயரிலும் வீட்டு வரி விதிக்கப்பட்டுள்ளது சம்மந்தமாக பெறப்பட்ட தகவல் பதில் தகவல் அறியும் உரிமை சட்டப்படி பெறப்பட்டது அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.19 15:29:57 +0530

District Munsif